

We Shine Academy™

guiding you to get through

# நடப்பு நிகழ்வுகள்
# (CURRENT AFFAIRS)
## பிப்ரவரி - 2020

We Are Here..!! To Guide You..!!



# WeShine Study Circle

# TNPSC

## நடப்பு நிகழ்வுகள்

## (CURRENT AFFAIRS)

## பிப்ரவரி - 19.02.2020

We Shine Academy™
guiding you to get through


Main Office @

**WeShine Study Circle**
Chrompet, Chennai
Phone: 8939144344, 8939244344

Branch Office @
**WeShine Study Circle**

Plot No: 47/60, "AK" Block,
7th Main Road, Anna Nagar
Chennai, Tamil Nadu – 600 040.

3rd Floor, West Wing, GokulArcarde,
No.2, Sardar Patel Road, Adyar
Chennai, Tamil Nadu– 600020.

https://weshineacademy.com

# பொருளடக்கம்


- தேசிய நிகழ்வுகள்
- விருதுகள்




We Shine Academy™

# தேசிய நிகழ்வுகள்

- 15வது நிதி ஆணையமானது பாதுகாப்பு மற்றும் உள்நாட்டு பாதுகாப்பிற்கு நிதியளிப்பதற்கான ஒரு தனிப்பட்ட முறையின் அவசியத்தை ஆராய்வதற்காக 5 உறுப்பினர்களை கொண்ட ஒரு குழுவை அமைத்துள்ளது.
    - இந்த குழுவானது **15வது நிதி ஆணையத்தின் தலைவரான நந்த் கிஷோர் சிங்** என்பவரால் தலைமை தாங்கப்பட இருக்கின்றது.

- பஞ்சாப் மாநிலக் காவல்துறைப் பொது இயக்குநர் '**பாராட்டு மற்றும் பரிந்துரை**' என்ற ஒரு **திட்டத்தைப் பஞ்சாபில் அறிமுகப்படுத்தியுள்ளார்**.
    - இது சிறப்பாகப் பணிபுரியும் காவல்துறை அதிகாரிகளின் நம்பிக்கையை அதிகரிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது. சிறப்பாகப் பணியாற்றும் காவல் துறையினருக்கு ஒவ்வொரு மாதமும் விருதுகள் வழங்கப்பட இருக்கின்றன.
    - **செய்தி துளிகள்**
        - இந்தத் திட்டத்தின் கீழ், ஒவ்வொரு மாதமும் 25 ஆம் தேதிக்குள் பல்வேறு மாவட்டங்களின் காவல்துறைத் தலைவர்களிடமிருந்து சிறந்த காவல் துறையினருக்கான பரிந்துரைகள் கோரப்படும்.
        - இந்தப் பரிந்துரைகள் மூத்த காவல்துறை அதிகாரிகள்

அடங்கிய குழுவால் ஆராயப்பட்டு, விருது பெறும் காவல் துறையினரின் பெயரானது ஒவ்வொரு மாதமும் 5 ஆம் தேதிக்குள் அறிவிக்கப்படும்.

- IFAD ன் 43வது நிர்வாகக் குழு கூட்டமானது இத்தாலியின் ரோம் நகரில் **"2030 ஆம் ஆண்டிற்குள் பட்டினியை முடிவுக்குக் கொண்டு வருவதற்காக நீடித்த உணவு முறைகளில் முதலீடு செய்தல்"** என்ற தலைப்பில் நடத்தப்பட்டது.
    - வேளாண் மேம்பாட்டிற்கான சர்வதேச நிதியமானது (International Fund for Agricultural Development – IFAD) காலநிலை மாற்ற நிகழ்வுகளும் விவசாயத்தின் மீதான அவற்றின் தாக்கங்களும் 2030 ஆம் ஆண்டிற்குள் சுமார் 100 மில்லியன் மக்களை வறுமை நிலைக்குள் தள்ளும் என்று கூறியுள்ளளது.

- இந்திய விமானப் படை அதிகாரியின் தலைமையில் **"வான் பாதுகாப்புக் கட்டுப்பாட்டகம்"** (Air Defence Command – ADC) என்று அழைக்கப்படும் முதலாவது ஒருங்கிணைந்த முப்படைக் கட்டுப்பாட்டகத்தை நிறுவ இருப்பதாக இந்திய முப்படைத் தலைமைத் தளபதி பிபின் ராவத் அறிவித்துள்ளார்.
    - **செய்தி துளிகள்**
        - ADC ஆனது இராணுவம், விமானப் படை மற்றும் கடற் படையின் வான் பாதுகாப்பு மற்றும் அவற்றிற்குச் சொந்தமான பொருள்களை ஒருங்கிணைத்து, நாட்டிற்கு

வான் பாதுகாப்பை வழங்க இருக்கின்றது.

- இவர் கூட்டுத் தீபகற்பக் கட்டுப்பாட்டகம் மற்றும் ஒரு தளவாடக் கட்டுப்பாட்டகம் ஆகியவற்றை உருவாக்குவதிலும் கவனம் செலுத்தி வருகின்றார்.

- இந்திய அரசானது தேசிய கரிம உணவுத் திருவிழாவை புது டெல்லியில் நடத்த உள்ளது.
    - இந்தத் திருவிழாவானது **"இந்தியாவின் கரிம வளச் சந்தைக்கான சாத்தியக் கூற்றை ஊக்கப்படுத்து"** என்ற கருப்பொருளின் கீழ் நடைபெற இருக்கின்றது.
    - **செய்தி துளிகள்**
        - 3 நாட்கள் நடைபெறும் இந்தத் திருவிழாவானது கரிமப் பொருட்களின் உற்பத்தியை உயர்த்துவதற்காகவும் கரிமப் பொருட்களின் உற்பத்தி மற்றும் பதப்படுத்தும் துறையில் பெண்கள் தொழில்முனைவோரை மேம்படுத்துவதற்காகவும் முதன்முறையாகக் கொண்டாடப்படுகின்றது.

## விருதுகள்

- **"விளையாட்டின் சிறந்த தருணம்"** (2000 – 2020) என்ற பிரிவில் **இந்திய கிரிக்கெட் ஜாம்பவான் சச்சின் டெண்டுல்கருக்கு விருது** வழங்கப்பட்டது.
    - புகழ்பெற்ற லாரியஸ் விருது வென்ற முதல் இந்திய

விளையாட்டு வீரர் இவரே.

- லாரியஸ் விருதுக்கான சிறந்த வீரர் 2020 : லீவிஸ் ஹாமில்டன் மற்றும் மெஸ்ஸி
- **செய்தி துளிகள்**
    - சிறந்த வீராங்கனை 2020 : ஜிம்னாஸ்டிக்ஸ் வீராங்கனை சிமோனே பில்ஸ் (USA)
    - சிறந்த அணி: கடந்த ஆண்டு ரக்பி உலக கோப்பையை வென்ற தென்னாப்பிரிக்க அணி
    - அதிக முறை லாரியஸ் விருது வென்றவர் : ரோஜர்.ஃ.பெடரர் (சுவிட்சர்லாந்து)

## திருக்குறள்

**குறள்:** 113

குறள் பால்: அறத்துப்பால்

குறள் இயல்: இல்லறவியல்

குறள் அதிகாரம்: நடுவு நிலைமை

**நன்றே தரினும் நடுவிகந்தாம் ஆக்கத்தை**
**அன்றே யொழிய விடல்.**

**விளக்கம்:** தீமையைத்தராது நன்மையே தருவதானாலும் நடு நிலை தவறுவதால் உண்டாகின்ற செல்வத்தை அப்பொழுதே கைவிட வேண்டும்.